வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

நாள் 29.10.2024 செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மக்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் நாட்டின் முன்னேற்றம் ஊக்கம் பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இளைஞர்களுக்கு அதிகபட்ச வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர, அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், தொடக்க பள்ளி ஆசிரியர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 131 பேருக்கு, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி பணி ஆணைகளை வழங்கினார்.

புதுச்சேரியில் அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை சுருக்க முறையில் திருத்தும் பணிகள், இன்று தொடங்கி உள்ளன.

மோடி – ஆயுர்வேதம் -1 (16)

மக்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் நாட்டின் முன்னேற்றம் ஊக்கம் பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று தன்வந்திரி ஜெயந்தி மற்றும் 9ஆவது ஆயுர்வேத தினத்தை ஒட்டி, புதுடெல்லியில்

நடைபெற்ற விழாவில் சுகாதாரத் துறைக்கான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்தும், வேறு பலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் உரையாற்றினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு 12 ஆயிரத்து 850 கோடி ரூபாய் ஆகும்.

மக்களின் உடல் நலத்தை பாதுகாக்கும் வகையில், நோய்த் தடுப்பு மருத்துவம், முறையான நோய் கண்டறிதல், விலை மலிவான மருந்துகள், சரியான சிகிச்சை, நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஆகிய 5 தூண்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். 150க்கும் மேற்பட்ட நாடுகளில் ஆயுர்வேத தினம் கொண்டாடப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று பிரதமர் தொடக்கி வைத்த திட்டங்களில், ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டம் மூலமான மருத்துவ காப்பீட்டு வசதியை, வருமான நிபந்தனை ஏதுமின்றி, 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் அனைவருக்கும் நீட்டிக்கும் திட்டமும் அடங்கும்.

மோடி – ஆயுர்வேதம் -2 (14)

நாட்டின் முதலாவது அகில இந்திய ஆயுர்வேத கழகத்தில், 2ஆம் கட்டமாக, பஞ்ச கர்மா மருத்துவமனை, ஆயுர்வேத மருந்து உற்பத்திக்குத் தேவையான பொருட்களின் விற்பனையகம், மத்திய நூலகம், கலையரங்கம், ஸ்டார்ட் - அப் நிறுவனங்களுக்கான ஆதரவு மையம் உள்ளிட்ட வசதிகளை பிரதமர் திறந்து வைத்தார்.

மத்திய பிரதேஷ் மாநிலம் மந்த்சோர், நீமச், சிவனீ ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 3 மருத்துவ கல்லூரிகளையும் பிலாஸ்பூர், பட்னா, கோரக்பூர், போபால், குவஹாத்தி மற்றும் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைகளில் பல்வேறு புதிய வசதிகள் மற்றும் சேவைகளையும் பிரதமர் தொடக்கி வைத்தார்.

மத்திய பிரதேசத்தில் ரத்லாம், கண்ட்வா உள்ளிட்ட 5 இடங்களில், செவிலியர் பயிற்சி கல்லூரி அமைக்கும் பணிகளுக்கும், பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கத்தின் கீழ், கர்நாடாகா, இராஜஸ்தான், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில், 21 மருத்துவமனைகளில், அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கு கட்டடம் கட்டும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

மோடி – வேலைவாய்ப்பு -1(17)

சுய சார்பு இந்தியாவை உருவாக்க அரசு முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், மின்சார வாகனம் முதல் – விண்வெளி வரை உள்ள தொழில்நுட்பத் துறைகளில், இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தை அரசு ஊக்கப்படுத்தி வருவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் பாதையில் இந்தியா பயணித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அரசுத் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட சுமார் 51 ஆயிரம் பேருக்கு, இன்று காணொளி காட்சி மூலம் நியமனக் கடிதங்களை வழங்கிப் பேசுகையில், பிரதமர் இவ்வாறு கூறினார். இளைஞர்களுக்கு அதிகபட்ச வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர, அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். நாட்டின் 500 முன்னணி நிறுவனங்களில் ஊதியத்துடன் கூடிய உள்ளிருப்பு பயிற்சி வாய்ப்புகளை இளைஞர்களுக்குப் பெற்றுத் தர, திட்டம் அமலாகி வருவதாகவும், இதனால் வேலைக்குத் தேவையான அனுபவத்தை இளைஞர்கள் பெற ஏதுவாகும் என்றும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் நிரந்தரமான அரசு வேலை வாய்ப்புகளை, அரசு, தொடர்ச்சியான முறையில் இளைஞர்களுக்கு வழங்கி வருவதாக பிரதமர் தெரிவித்தார். பாரதிய ஜனதா மற்றும் தோழமை கட்சிகள் ஆளும்

மோடி – வேலைவாய்ப்பு -2 (16)

மாநிலங்களிலும், ஆயிரக்கணக்கிலான இளைஞர்கள் நியமனக் கடிதம் பெற்றுள்ளதாக அவர் கூறினார். ஹரியானாவில் புதிதாக அமைந்த அரசு, 26 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை கொடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். நாட்டில் இன்று மொத்தம் 40 இடங்களில் ரோஜ்கர் மேளா என்னும் இத்தகைய வேலைவாய்ப்பு திருவிழாக்கள் நடைபெற்றன.

சென்னையில் நடைபெற்ற ரோஜ்கார் மேளாவில், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்து கொண்டு, 150 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கினார். மொத்தம் 10 இலட்சம் இளைஞர்களுக்கு, அரசுத் துறைகள் மற்றும் அமைச்சகங்களில் வேலைவாய்ப்பு அளிப்பதே அரசின் இலக்கு என்று அவர் தெரிவித்தார்.

தேசத்தை கட்டி அமைக்கும் பணிகளில் பங்களிப்பதற்கான வாய்ப்புக்களை இளைஞர்களுக்கு வழங்கி, இளைஞர்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்தும் நோக்கத்துடன், ரோஜ்கார் மேளாக்கள் நடத்தப் படுகின்றன. புதிதாக அரசு அலுவலகங்களுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இளைஞர்கள், iGOT கர்மயோகி இணையதளத்தின் கர்மயோகி பிராரம்ப் பாடங்கள் மூலம், அடிப்படை பயிற்சிக்கான வாய்ப்புக்களையும் பெறுகிறார்கள்.

ஒற்றுமை ஓட்டம் -1 (15)

அக்டோபர் 31ஆம் தேதி, சர்தார் வல்லப்பாய் படேல் பிறந்த நாளை முன்னிட்டு, இன்று புதுடெல்லியில் நடைபெற்ற ஒற்றுமை ஓட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மேஜர் தியான்சந்த் தேசிய விளையாட்டு அரங்கில் இருந்து கொடியசைத்து தொடக்கி வைத்தார். இன்று இந்தியா ஒவ்வொரு துறையிலும் வலுவடைந்து, உலக அளவில் முன்னணி நாடாக மேம்பட்டு வருவதற்கு, அடித்தளம் அமைத்தவர் சர்தார் படேல்தான் என்றும் ஒவ்வொரு துறையிலும், படேலின் தொலைநோக்கு பார்வைகளுக்கே பிரதமர் திரு. நரேந்திர மோடி வடிவம் கொடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

படேல் பிறந்தநாளை ஒட்டிய ஒற்றுமை ஓட்டங்கள், முன்னேறிய இந்தியாவிற்கான தீர்மானமாகவும், மாறி இருப்பதாக திரு. அமித் ஷா கூறினார். சர்தார் படேலின் பங்களிப்புகளை மறக்கடிக்க பல ஆண்டுகளாக துரதிஷ்டகரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், பிரதமர் திரு. நரேந்திர மோடிதான், படேல் பற்றிய நினைவுகளை போற்றும் வகையில், உலகின் மிகப் பெரிய ஒற்றுமை சிலையை குஜராத்தில் நிறுவியதாக அவர் தெரிவித்தார்.

ஒற்றுமை ஓட்டம் - 2 (5)

ஒற்றுமை ஓட்டத்தின் தொடக்க விழாவில் மத்திய அமைச்சர்கள் திரு. மன்சுக் மாண்டவியா, திரு. மனோகர் லால், திரு. நித்யானந்த ராய், டெல்லி துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதேபோன்ற ஒற்றுமை ஓட்டங்கள் இன்று நாடு முழுவதிலும் பல்வேறு இடங்களில் நடைபெற்றன.

புதுச்சேரி நியமனம் (10)

புதுச்சேரியில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ், நேரடி நியமனத்திற்காக தொடக்க பள்ளி ஆசிரியர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 131 பேருக்கு, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி பணி ஆணைகளை வழங்கினார். காமராஜர் மணி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் திருமதி. பிரியதர்ஷினி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். தொடக்க பள்ளி ஆசிரியர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 131 பேரில், 114 பேர் காரைக்கால் பகுதியிலும், 17 பேர் மாஹி பகுதியிலும், பணி அமர்த்தப்படுவதாக முதலமைச்சர் அலுவலகத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடன் தள்ளுபடி (12)

புதுச்சேரியில் பிரதமக் கூட்டுறவு விவசாய கடன் சங்கங்களில் சிறு-குறு விவசாயிகள் வாங்கி, 2022 மார்ச் 31ஆம் தேதி வரை வாங்கிய திருப்பிச் செலுத்தாத கடன்களும், நிலுவை வட்டி மற்றும் அபராத வட்டியும், தள்ளுபடி செய்யப் பட்டதைத் தொடர்ந்து, இதை நேர் செய்வதற்கான முதல் தவணையாக மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கிக்கு, 2 கோடி ரூபாய் வழங்கி உள்ளது. எஞ்சிய 9.61 கோடி ரூபாய், 2 தவணைகளாக வழங்கப்படும் என்றும், இந்த பணத்தைக் கொண்டு விவசாயிகளின் கடன் கணக்குகளை நேர் செய்து, புதிய விவசாய கடன்களை வழங்க மாநில கூட்டுறவு வங்கிக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் அலுவலகம் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. சம்மந்தப்பட்ட விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி கடிதம் தீபாவளிக்குப் பின்னர் நடைபெற உள்ள அரசு விழாவில் துணைநிலை ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் முன்னிலையில் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரி வாக்காளர் பட்டியல் (14)

புதுச்சேரியில் அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை சுருக்க முறையில் திருத்தும் பணிகள், இன்று தொடங்கி உள்ளன. மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல்

அதிகாரியுமான திரு. குலோத்துங்கன், வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டு, திருத்தப் பணிகளைத் தொடக்கி வைத்தார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் உள்ளிட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை, வாக்காளர்கள் இன்று முதல், நவம்பர் 28ஆம் தேதி வரை, அந்தந்த வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் தாக்கல் செய்யலாம் என்றும், இதற்கென, நவம்பர் 9-10, 23-24 ஆகிய சனி – ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்றும் தேர்தல் துறை அறிவித்துள்ளது. விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான காலம், டிசம்பர் 24ஆம் தேதி முடிவடையும் என்றும் அதன் பின்னர், 2025 ஜனவரி 6ஆம் தேதி, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரி ஆக்கிரமிப்பு (11)

புதுச்சேரியில் சாலையோர ஆக்கிரமிப்புகளையும், அனுமதியின்றி பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கட்-அவுட்டுகள், பேனர்கள் மற்றும் கொடிகளையும், அகற்றுவது குறித்து அண்மையில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின் படி, எந்தெந்த பகுதிகளில், எந்தெந்த தேதியில், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பது பற்றிய பட்டியல் ஒன்றை மாவட்ட ஆட்சியர்

அலுவலகம் இன்று வெளியிட்டுள்ளது. இதன்படி வரும் நவம்பர் 4ஆம் தேதி நேருவீதி ராஜா தியேட்டர் முதல் போக்குவரத்து காவல் நிலையம் வரை உள்ள பகுதியில், சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்றும், நவம்பர் 29ஆம் தேதி வரை பல்வேறு நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் இதேபோன்ற பணிகள் மேற்கொள்ளப் படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரி பட்டாசு (7)

புதுச்சேரியில் தீபாவளியின் போது பாதுகாப்பான முறையில் பட்டாசு வெடிப்பதற்கான வழிமுறைகளை சுகாதாரத் துறை பரிந்துரைத்துள்ளது. தரமான பட்டாசுகளை வாங்குதல், திறந்த வெளியில் பட்டாசு வெடித்தல், பட்டாசு வெடிக்கும் போது ஒரு வாளி தண்ணீரை பக்கத்தில் வைத்துக் கொள்ளுதல், எளிதில் தீப்பற்றக் கூடிய ஆடைகளைத் தவிர்த்தல், குழந்தைகளை உரிய மேற்பார்வையுடன் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதித்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அரசின் வழிமுறைகளில் வலியுறுத்தப் பட்டுள்ளன.

*காப்பி எடிட்டர் (18)*

ஓர் அறிவிப்பு

புதுச்சேரி ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஒரு Copy Editor பணியிடத்திற்கு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 35-வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகள், ஊடகத் துறையில் 5 ஆண்டு அனுபவம் பெற்றிருந்தால், இதற்கு விண்ணப்பிக்கலாம். இதழியல், வெகு ஜனத் தொடர்பியல், மற்றும் சம்பந்தப்பட்ட இதர துறைகளில் பட்டம் அல்லது முதுகலைப் பட்டயம் பெற்றவர்களாக இருந்தால், 3 ஆண்டு ஊடகத் துறை அனுபவம் போதுமானது. விண்ணப்ப தாரர்கள், இந்தி அல்லது ஆங்கிலம், மற்றும், தமிழில் மொழித் திறன் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத் தேடுதல் பொறியின் பயன்பாட்டில் அனுபவம் உள்ளவர்களாகவும், நடப்பு விவகாரங்கள், பிராந்தியப் பிரச்சனைகள், மற்றும் தேசியப் பிரச்சனைகளை அறிந்தவர்களாகவும் இருத்தல், விரும்பத் தக்க தகுதியாக கருதப்படும். ஓராண்டு காலத்திற்கான, பின்னர் நீட்டிக்கத் தகுந்த, இந்த முழுநேர ஒப்பந்தப் பணிக்கு, மாதம் 35 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்படும். தகுதியும், மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் பணிபுரியும் ஆர்வமும் உள்ளவர்கள், applications.prasarbharati.org என்ற இணையதளம் மூலம், உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்கலாம்.

மல்லாடி (6)

புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், இன்று, ஏனாமில் பொதுப்பணித் துறை செயலர் டாக்டர் ஜெயந்த் குமார் ரே-யை, மண்டல நிர்வாக அதிகாரி அலுவலகத்தில் சந்தித்து, ஏனாம் பகுதியின் நிலுவை பிரச்சனைகள் குறித்துப் பேசினார். ஏனாம் ஊசி கோபுரத்தை பழுது பார்த்து புதிய மின் தூக்கி நிறுவுதல், ஏனாம் தாவரவியல் பூங்காவில், வெண்கல சிவ லிங்கம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் இதில் அடங்கும்.

வானிலை (10)

இன்று, தென்னிந்தியாவின் கிழக்கு கடலோரப் பகுதிகளை ஒட்டி, வளிமண்டல கீழடுக்குச் சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், நவம்பர் 4ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. வரும் 1ஆம் தேதி தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, தேனி, திண்டுக்கல், நாமக்கல், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம் சின்னக்கல்லார், மதுரை மாவட்டம் சோழவந்தான் ஆகிய இடங்களில், தலா 4 செண்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மக்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் நாட்டின் முன்னேற்றம் ஊக்கம் பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இளைஞர்களுக்கு அதிகபட்ச வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர, அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், தொடக்க பள்ளி ஆசிரியர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 131 பேருக்கு, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி பணி ஆணைகளை வழங்கினார்.

புதுச்சேரியில் அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை சுருக்க முறையில் திருத்தும் பணிகள், இன்று தொடங்கி உள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / KR / RK